# ஒய்ஸ்டரில் இருந்து உச்சப் பயன் பெறுக

## ஒரு பாவனையாளர் வழிகாட்டி

ஜனவரி **2009** முதல் மறுஅறிவித்தல் வரை.




MAYOR OF LONDON

Transport for London

# ஓய்ஸ்டர் மூலம் உங்களுக்கு கிடைக்கும் பயன் என்ன?

பேருந்து, டியூப் என்கிற சுரங்கத் தொடருந்து **(Tube)**, தெருத்தண்டவாளத்தில் ஓடும் ட்ராம், டிஎல்ஆர் **(DLR)** என்கிற டொக்லான்ட் இலகுத் தொடருந்து மற்றும் இலண்டன் நிலமீதான தொடருந்து **(London Overground)** ஆகியவற்றில் ஒருவழிப் பயணங்களை மேற்கொள்ள ஆகக்குறைந்த கட்டணங்களைச் செலுத்த வழி செய்வது ஓய்ஸ்டராகும்.

உங்கள் வசமுள்ள ஓய்ஸ்டர் அட்டை மீளப்பயன்படுத்தப்படக் கூடியது. அதன் செயற்பாட்டை இணயத்தினூடாகச் செய்யலாம். மேலும் அதில் உங்கள் வரவில் உள்ள பருவகாலச் சீட்டையும் பயணம் செய்யப் பணம் செலுத்தும் **(pay as you go)** வசதியையும் பாதுகாத்து வைத்துக் கொள்ளலாம்.

ஓய்ஸ்டரைப் பயன்படுத்தும் அதிசிறந்த வழிகளை உங்களுக்கு எடுத்துக்கூறுவதன் மூலம் ஓய்ஸ்டரின் உச்சப்பயனை நீங்கள் பெற்று–உங்கள் நேரத்தையும் பணத்தையும் மீதப்படுத்த உதவும் வகையில் இவ்வழிகாட்டி அமைக்கப்பட்டுள்ளது.



# ஓய்ஸ்டரூடாக பயணக் கட்டணம் செலுத்தல்

உங்கள் பயணத்துக்குரிய கட்டணத்தை நீங்கள் பெற்றுள்ள ஓய்ஸ்டர் அட்டைமூலம் செலுத்துவதற்குப் பல வழிகள் உள்ளன:

## பயணம் செய்யப் பணம் செலுத்தல் (pay as you go)

**மேற்கொள்ளும் பயணங்களுக்கு மட்டும் அவற்றை மேற்கொள்கையிலேயே கட்டணம் செலுத்தும் இசைவான தன்மையை நீங்கள் விரும்பினால், ஓய்ஸ்டரின் பயணம் செய்யப்பணம் செலுத்தல் வசதி உங்களுக்குச் சிறந்ததொரு தெரிவாக இருக்கும்.**

பயணம் செய்யப் பணம் செலுத்தல் ஒருவழிப் பயணங்களுக்கான கட்டணத்தை செலுத்த, உங்கள் ஓய்ஸ்டர் அட்டையில் பணவரவு இட்டுவைக்க உங்களை அனுமதிக்கிறது. காசு கொடுத்துச்சீட்டுவாங்குவதைவிட இதுமலிவானது.ஓய்ஸ்டர்மூலம்எப்போதும்ஆகக்குறைந்த கட்டணம் அறவிடப்படவேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதே எங்கள் நோக்கமாகும். அவ்வாறு அது செய்யாத சந்தர்ப்பத்தில் கட்டணத்தில் ஏற்படும் வித்தியாசத்தை நாங்கள் மீளளிப்புச் செய்வோம்.

உங்கள் ஓய்ஸ்டர் அட்டையில் உள்ள பணவரவு ஒருபோதும் காலாவதியாகாது. நீங்கள் அதனைப் பயன்படுத்தும்வரை அது இருப்பில் இருக்கும். வரவில் உள்ள பணத்தை நீங்கள் பயன்படுத்திமுடிய, பணமிட்டு நிரப்புவதே நீங்கள் செய்யவேண்டியது.

இது மட்டுமா? ஒரு நாளில் (அதாவது 0430 மணி தொடக்கம் மறுநாள் 0430 மணிக்கு முன் ) நீங்கள் விரும்பும் எத்தனை தடவைகளும் பயணம் செய்ய ஓய்ஸ்டரின் நாளாந்த விலைமுடித்தல் அனுமதிக்கிறது. அவ்விதம் செய்யும்போது சமமான நாள் பயண அட்டை (Day Travelcard)அல்லது ஒருநாள் பேருந்து மற்றும் ட்ராம் அனுமதிச்சீட்டு (One Day Bus & Tram Pass) ஆகியவற்றுக்கு நீங்கள் செலுத்தும் விலைக்குக் கூடுதலாக ஒருபோதும் செலுத்தமாட்டீர்கள். நீங்கள்எப்போது,எவ்வாறுபயணம்செய்கிறீர்கள்என்கிறஅடிப்படையில் விலைமுடித்தல் பொறிமுறை உச்சவிலையை கணிக்கும். நாளாந்த விலைமுடித்தல் சரியாக இருப்பதற்கு நீங்கள் சரியாகத் தொட்டு உள்நுழைந்து தொட்டு வெளியேறவேண்டும் - விபரங்களை உங்கள் ஓய்ஸ்டர் அட்டையை எவ்வாறு பயன்படுத்துவது என்ற பகுதியில் பாருங்கள்.

நீங்கள் முதன்முதலாக ஓய்ஸ்டர் அட்டை ஒன்றைப் பெறும்போது, அதனைப் பயணம் செய்யப் பணம் செலுத்துவதற்கான நிரப்புதலாக கருதினால் மீளப்பெறத்தக்க £3 வைப்புத்தொகை ஒன்றை நீங்கள் செலுத்தல் வேண்டும்.

ஓய்ஸ்டர் அட்டையில் உள்ள பயணம் செய்யப் பணம் செலுத்தும் வரவைப் பயன்படுத்தி ஒரு சமயத்தில் ஒருவரே பயணிக்கமுடியும். இருப்பினும், அது வயதுவந்தவர்-விகித பயணம் செய்யப் பணம் செலுத்தும் வரவை மட்டும் கொண்டிருப்பின், அதனை நீங்கள் பயன்படுத்தாதபோது, உங்கள் நண்பர் ஒருவர் பயன்படுத்த இரவலாகக் கொடுக்கலாம்.

## தன்னியக்க நிரப்புதல்

**நீங்கள் பயணம் செய்யப் பணம் செலுத்துபவரானால், தன்னியக்க நிரப்புதல் (auto top-up) மூலம் மேலும் நேரத்தை மீதமாக்கலாம்.**

பணவரவு இடுவதற்கு நீங்கள் வரிசையில் காத்து நிற்கும் தேவையை இது நீக்கிவிடுகிறது. பதிலாக உங்கள் மீதத்தொகை £5 க்குக்கீழ் குறையும்போதெல்லாம் உங்கள் ஒய்ஸ்டர் அட்டை தன்னியக்கமாக £20 ஆல் அல்லது £40 ஆல் (உங்கள் தெரிவுப்படி) நிரப்பப்பட்டுவிடும். வேறுவகையில் சொல்வதானால், பயணம் செய்யப் பணம் செலுத்தி செல்வதற்கு வேண்டிய வரவு ஒருபோதும் உங்கள் ஒய்ஸ்டரில் இல்லாது போய்விடாது.

தன்னியக்க நிரப்புதலுக்கான ஏற்பாட்டை செய்வதற்கு பின்வரும் இணையதளம் செல்லுங்கள்: **tfl.gov.uk/oyster**



## பயண அட்டையும் பேருந்து மற்றும் ட்ராம் அனுமதிச் சீட்டுக்குரிய பருவகாலச்சீட்டுக்களும்

**நீங்கள் நாளாந்த பருவகாலச்சீட்டுப் பாவனையாளராயிருந்தால் மூன்று பருவகாலச்சீட்டுக்கள் வரை உங்கள் ஒய்ஸ்டர் அட்டையில் சேர்த்துவைத்துக்கொள்ள முடியும்.**

**பேருந்து மற்றும் ட்ராம் அனுமதிச் சீட்டுக்களை** இலண்டனின் அனைத்துப் பேருந்துகளிலும் ட்ராம்களிலும் பயன்படுத்தலாம்.

**பயண அட்டைகளை,** சுரங்கத் தொடருந்து (Tube), டிஎல்ஆர் (DLR), இலண்டன் நிலமீதான தொடருந்து (London Overground) மற்றும் தேசியத் தொடருந்து (National Rail) ஆகியவற்றைப் பொறுத்தவரை உங்கள் சீட்டு செல்லுபடியாகும் மண்டலங்களிலும் அத்துடன் இந்த இலச்சினையைக்காட்டும் அனைத்து இலண்டன் பேருந்துகளிலும் பயணிப்பதற்குப் பயன்படுத்தலாம். மண்டலங்கள் 3, 4, 5, அல்லது 6 ஆகியவற்றை உள்ளடக்கும் பயண அட்டை ட்ராம்களில் ஏற்றுக்கொள்ளப்படும்.

பருவகாலச் சீட்டுக்கள் உங்கள் பாவனைக்கு மாத்திரம் உரியவை என்பதைத் தயவு செய்து நினைவில் வைத்திருங்கள். பருவகாலச் சீட்டுக்கள் பற்றிய மேலதிக தகவல்களை அறிய பின்வரும் இணையதளம் செல்லுங்கள்: **tfl.gov.uk/fares**

## பருவகாலச் சீட்டுக்களையும் பயணம் செய்யப் பணம் செலுத்தலையும் ஒருங்கிணைத்தல்

ஒய்ஸ்டரின் அமைப்பு இசைவான தன்மையுடையது. பயண அட்டைகள், பேருந்து மற்றும் ட்ராம் அனுமதிச்சீட்டுக்குரிய பருவகாலச் சீட்டுக்கள், மற்றும் பயணம் செய்யப் பணம் செலுத்தும் வரவு என்பனவற்றை ஒரே அட்டை யிலேயே சேர்த்து வைக்கக்கூடியதாக அது அமையப் பெற்றுள்ளது. இதன் மூலம் உங்கள் பயண அட்டை செல்லுபடியாகும் மண்டலங்களுக்கு அப்பால் பயணங்களை மேற்கொள்ள வழி ஏற்படுகிறது. அதுபோலவே பேருந்து மற்றும் ட்ராம் அனுமதிச் சீட்டு கொள்வோர், சுரங்கத் தொடருந்து (Tube) டிஎல்ஆர் (DLR), இலண்டன் நிலமீதான தொடருந்து (London Overground) மற்றும் பங்குபற்றும் தேசிய தொடருந்து (National Rail) சேவைகளில் பயணம் மேற்கொள்ளலாம்.

உங்கள் பயணம் முழுவதும் பயணம் செய்யப் பணம் செலுத்தும் வசதி ஏற்றுக்கொள்ளப்படும் பாதைகளிலேயே மேற்கொள்ளப்படவேண்டும். அவ்வசதி ஏற்றுக்கொள்ளப்படாத தேசிய தொடருந்து (National Rail) சேவைப்பகுதிகளும் உங்கள் பயணத்தின் ஒரு அங்கமாக இருப்பின், அப்பகுதிக்கென நீங்கள் ஒரு காகிதச்சீட்டு வாங்கவேண்டி இருக்கும்.

# உங்கள் ஒய்ஸ்டர் அட்டையை எவ்வாறு பயன்படுத்துவது

சுரங்கத் தொடருந்து (Tube), டிஎல்ஆர் (DLR), இலண்டன் நிலமீதான தொடருந்து (London Overground) மற்றும் பங்குபற்றும் தேசிய தொடருந்து சேவை (National Rail) ஆகியவற்றில் பயணம் செய்யும்போது சரியான கட்டணத்தைச் செலுத்துவதை உறுதி செய்ய, நீங்கள் எப்போதும்பயணத் தொடக்கத்தில் மஞ்சள் வாசிப்புப் பொறியில் தொட்டு உள்நுழைந்து பயண முடிவில் தொட்டு வெளியேற வேண்டும். அவ்வாறு செய்யாவிடில் உங்களிடம் கூடியபட்ச காசுக்கட்டணம் அறவிடப்படும். பேருந்துகளைப்பொறுத்தவரை, ஏறும்போது தொடவேண்டும். ட்ராம்களில் ஏறுமுன் ட்ராம் தரிப்பு மேடையில் உள்ள மஞ்சள் வாசிப்புப் பொறியில் தொடவேண்டும். ஆனால் இரு விடயங்களிலும் பயண முடிவில் (நீங்கள் விம்பிள்டனுக்கு ட்ராமில் செல்வதாயிருந்தாலொழிய) தொட்டு வெளியேறலாகாது.

உங்கள் ஒய்ஸ்டர் அட்டையை மஞ்சள் வாசிப்புப் பொறியில் வைத்துத் தொடும்போது ஒரு ‘பீப்’ ஒலியுடன் பச்சை வெளிச்சம் வந்தால் (5-10 மற்றும் 11-15 ஒய்ஸ்டர் நிழற்பட அட்டைகளெனில் இரண்டுக்கு மேற்பட்ட ‘பீப்’ ஒலி) உங்கள் அட்டை பயணத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டதென்று அர்த்தமாகும். இரண்டு ‘பீப்’ ஒலியுடன் சிவப்பு வெளிச்சம் வந்தால் உங்கள் ஒய்ஸ்டர் அட்டை நிராகரிக்கப்பட்டுவிட்டதென்று அர்த்தமாகும். உங்கள் ஒய்ஸ்டர் அட்டை பயணத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படும் வரை அல்லது உங்கள் பயணத்துக்கு வேறாகக் கட்டணம் செலுத்தும் வரை நீங்கள் மேற்கொண்டு செல்லலாகாது.



## ஒய்ஸ்டரை எங்கே பெற்றுக்கொள்ளலாம்

ஒய்ஸ்டர் அட்டை ஒன்றை நீங்கள் **tfl.gov.uk/oyster** இணையதளத்தில், ஒய்ஸ்டர் சீட்டுத் தரிப்புக்களில் (Oyster Ticket Stops), சுரங்கத் தொடருந்து (Tube) மற்றும் இலண்டன் நிலமீதான தொடருந்து (London Overground) நிலையங்களின் சீட்டு அலுவலகங்களில், அல்லது இலண்டன் பயணத் தகவல் மையங்களில் (London Travel Information Centres) பெற்றுக் கொள்ளலாம்.

கீழ்க்காணும் வகைகளில் உங்கள் வரவைக் கூட்டலாம் பருவகாலச் சீட்டுக்களை வாங்கலாம் அல்லது புதுப்பிக்கலாம்:

- **tfl.gov.uk/oyster** இணையதளத்தில் (வருடாந்த பேருந்து மற்றும் ட்ராம் அனுமதிச் சீட்டுக்கள் இணையத்தில் முதன்முறை வழங்கலுக்கே கிடைக்கும்)
- ஒய்ஸ்டர் சீட்டுத் தரிப்புக்களில் (Oyster Ticket Stops) - உங்களுக்கு மிகக்கிட்டிய தரிப்பை **tfl.gov.uk/fares** இணையதளத்தில் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள்
- சுரங்கத் தொடருந்து (Tube) மற்றும் இலண்டன் நிலமீதான தொடருந்து (London Overground) நிலைய சீட்டு அலுவலங்களிலும் தொடுதிரைப் பொறிகளிலும்
- இலண்டன் பயணத் தகவல் மையங்களில் (London Travel Information Centres).

## முன்னதாகவே சீட்டுக்களை வாங்குதல்

7 நாள், மாதாந்த மற்றும் அதற்கும் கூடிய கால (வருடாந்த உட்பட) பயண அட்டைகளையும் பேருந்து மற்றும் ட்ராம் அனுமதிச் சீட்டுக்குரிய பருவகாலச் சீட்டுக்களையும் கீழ்க்கண்டவாறு புதுப்பித்துக் கொள்ளலாம்:

- இணையத்தில் 30 நாட்களுக்கு முன்பிருந்து (7 நாள், 1, 3 அல்லது 6 மாத அல்லது வருடாந்த பயண அட்டைகள் மட்டும்). இல்லையேல் சுரங்கத் தொடருந்து (Tube) மற்றும் இலண்டன் நிலமீதான தொடருந்து (London Overground) நிலைய சீட்டு அலுவலகங்களில்
- 4 நாட்கள் வரை முன்பிருந்து சுரங்கத் தொடருந்து (Tube) மற்றும் இலண்டன் நிலமீதான தொடருந்து (London Overground) நிலைய தொடுதிரைப் பொறிகளில்

- 7 நாட்களுக்கு முன்பிருந்து ஓய்ஸ்டர் சீட்டுத் தரிப்புக்களிலும் (Oyster Ticket Stops) (7 நாள், மாதாந்த பயண அட்டைகள்/பேருந்து மற்றும் ட்ராம் அனுமதிச் சீட்டுக்கள் மற்றும் வருடாந்த பேருந்து மற்றும் ட்ராம் அனுமதிச் சீட்டுக்கள்) அத்துடன் இலண்டன் பயணத் தகவல் மையங்களிலும் (London Travel Information Centres) (7 நாள், மாதாந்த மற்றும் வருடாந்த பயண அட்டைகளும் பேருந்து மற்றும் ட்ராம் அனுமதிச் சீட்டுக்களும்).

ஓய்ஸ்டர்நிழற்படஅட்டைகள்,மற்றும்சிறார்கள்,பதின்வயதினர்மாணவர்கள்என்போருக்கான விலைத் தள்ளுபடிகள் ஆகியவை பற்றிய தகவல்களுக்கு இணையத்தை நாடுங்கள் அல்லது சுரங்கத் தொடருந்து (Tube) நிலையங்களிலும் ஓய்ஸ்டர் சீட்டுத் தரிப்புக்களிலும் (Oyster Ticket Stops) உள்ள வெளியீட்டை எடுத்து வாசியுங்கள்.

# உங்கள் ஒய்ஸ்டர் அட்டையைப் பாதுகாருங்கள்

உங்கள் ஒய்ஸ்டர் அட்டையைப் பதிவு செய்துகொள்ளும்போது, அதனை நீங்கள் இழந்துபோனாலும் அது திருடப்பட்டாலும் அதில் உள்ள உங்கள் வரவும் பருவகாலச் சீட்டுக்களும் - உங்களுக்கு மன ஆறுதலைத் தரும் வகையில் - பாதுகாப்பாக இருக்கும். அத்துடன் (போக்குவரத்தில் திட்டமிடப்படும் தடைகள் உட்பட) உங்கள் வழமையானபயணத்தைப் பாதிக்கும் ஆகப்பிந்திய பயணச் சேதிகளும் மற்றும் புதிய சேவைகள் பற்றிய தகவல்களும் பெற்றுப் பயனடைவீர்கள்.

உங்கள் அட்டையை **tfl.gov.uk/oyster** இணைய தளத்துக்குச் சென்று பாதுகாருங்கள் அல்லது பதிவு செய்யும் படிவம் ஒன்றை உங்கள் உள்ளூர் ஒய்ஸ்டர் சீட்டுத் தரிப்பிலோ (Oyster Ticket Stops) அல்லது சுரங்கத் தொடருந்து (Tube) அல்லது இலண்டன் நிலமீதான தொடருந்து (London Overground) நிலையத்திலோ பெற்றுக் கொள்ளுங்கள்.

நிரப்பிய பதிவுப் படிவத்தை உங்கள் ஒய்ஸ்டர் அட்டையுடன் சேர்த்து கீழ்க்கண்டவாறு அனுப்புங்கள்:

- ஏதாவது சுரங்கத் தொடருந்து (Tube) அல்லது இலண்டன் நிலமீதான தொடருந்து (London Overground) நிலைய சீட்டு அலுவலகத்துக்கு
- ஒய்ஸ்டர் சீட்டுத் தரிப்புக்கு (Oyster Ticket Stop)
- இலண்டன் பயணத் தகவல் மையத்துக்கு (London Travel Information Centre).



# தேசியத் தொடருந்தில் ஒய்ஸ்டரைப் பயன்படுத்தல்

ஒய்ஸ்டரில் உள்ள பயண அட்டைகளை, இலண்டனில்,தேசிய தொடருந்து சேவைகளில் (National Rail), பணம் செலுத்தப்பட்ட மண்டலங்களில் (ஹீத்ரோ எக்ஸ்பிரஸ் சேவை (Heathrow Express) மற்றும் ஹீத்ரோ கனெக்ட்டின் (Heathrow Connect) ஹீத்ரோவுக்கும் ஹேய்ஸுக்கும் ஹார்லிங்டனுக்கும் இடையேயான சேவை ஆகியவை தவிர்த்து) பயன்படுத்தலாம். அத்துடன் ஒய்ஸ்டரில் உள்ள பயணம் செய்யப் பணம் செலுத்தும் வசதியை இலண்டன் நிலமீதான தொடருந்து (London Overground) சேவைகளிலும் கீழ்க்கண்ட தேசிய தொடருந்து (National Rail) சேவைகளிலும் பயன்படுத்தலாம்:

- அமர்ஷாமிலிருந்து மார்லிபோனுக்கு
- பின்ஸ்பரி பார்க்கிலிருந்து கிங்ஸ்க்ரொஸ்/மூர்கேட்டுக்கு
- ஸ்ட்ரட்போர்ட்டிலிருந்து லிவர்பூல் ஸ்ட்ரீட்டுக்கு
- தொட்டன்ஹாம் ஹேல்/செவன் சிஸ்டர்ஸிலிருந்து ஸ்ட்ரட்போர்ட்டுக்கு
- அப்மின்ஸ்டர்/றெய்ன்ஹாம் (எஸெக்ஸ்) இலிருந்து பார்க்கிங் வழியாக பென்சேர்ச் ஸ்ட்ரீட்/லிவர்பூல் ஸ்ட்ரீட்டுக்கு (ஆனால் பொரெஸட் கேட்/மேரிலாண்ட் அல்ல)
- உவால்தம்ஸ்ரோ சென்ட்ரல்/தொட்டன்ஹாம் ஹேல்/ செவன் சிஸ்டர்ஸிலிருந்து லிவர்பூல் ஸ்ட்ரீட்டுக்கு
- உவாட்போர்ட் ஜங்ஷனிலிருந்து க்ளபம் ஜங்ஷனுக்கு (தென் சேவை)
- உவாட்போர்ட் ஜங்ஷனிலிருந்து இயூஸ்டனுக்கு (இலண்டன் மிட்லாண்ட் சேவை)
- உவெஸ்ட் ட்ரேய்ட்டன்/க்றீன்போர்ட்டிலிலிருந்து படிங்டனுக்கு
- உவெஸ்ட் ஹாம்ஸ்ரெட் (தேம்ஸ்லிங்க்) இலிருந்து மூர்கேட்/ எலிபன்ட் அன்ட் காஸில்/இலண்டன் பிரிஜுக்கு
- உவெஸ்ட் றய்ஸ்லிப்பிலிருந்து மார்லிபோனுக்கு.

பயணம் செய்யப் பணம் செலுத்திச் செல்லல் செல்லுபடியாகும் பாதைகளின் பட்டியல் தொடர்ச்சியாக நீடிக்கப்படுகிறது. பயணத்தை மேற்கொள்வதற்குமுன் பயணம் செய்யப் பணம் செலுத்தல் ஏற்றுக்கொள்ளப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு **tfl.gov.uk/fares** இணையதளத்தில் அல்லது நீங்கள் செல்லும் தொடருந்து நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

# அடிக்கடி எழுப்பப்படும் கேள்விகள்

**எனது ஒய்ஸ்டர் அட்டையை இழந்துவிட்டால் அல்லது அது திருடப்பட்டால் என்ன செய்யவேண்டும்?**

உங்கள் ஒய்ஸ்டர் அட்டையை இழந்து விட்டீர்களானால் அல்லது அது திருடப்பட்டால் அது பதிவு செய்யப்பட்டிருக்கும் அல்லது இணையத்தில் பாதுகாப்பு பெற்றிருக்கும் பட்சத்தில் உங்கள் வரவு/பருவகாலச் சீட்டு என்பன பாதுகாப்பாக இருக்கும். நீங்கள் உங்கள் இழப்பை **tfl.gov.uk/oyster** என்ற இணையதளத்தில் அல்லது ஒய்ஸ்டர் உதவிச்சேவைக்கு **0845 330 9876*** என்ற தொலைபேசி எண்ணில் முறையிடலாம். உங்களுக்குப் புதிய அட்டையொன்று வழங்கப்படும். அதில் மீதமாக இருக்கக்கூடிய உங்கள் வரவு அல்லது பருவகாலச் சீட்டு மீள இடப்படும். உங்கள் ஒய்ஸ்டர் அட்டை பதிவு செய்யப்படாமலோ பாதுகாக்கப்படாமலோ இருப்பின், இழந்த அல்லது திருட்டுப் போன அட்டையில் உள்ள வரவையோ பருவகாலச்சீட்டுக்களையோ மீளளிப்பு செய்ய எங்களால் இயலாது.

**கூடியபட்ச காசுக் கட்டணம் என்னிடம் அறவிடப்பட்டிருப்பதேன்?**

நீங்கள் சுரங்கத் தொடருந்திலோ (Tube) டிஎல்ஆரிலோ (DLR), இலண்டன் நிலமீதானதொடருந்திலோ (London Overground) அல்லது பங்குபற்றும் தேசிய தொடருந்து (National Rail) சேவையிலோ சரியாக தொட்டு உட்சென்று தொட்டு வெளியேறாவிடில் கூடியபட்ச காசுக்கட்டணம் அறவிடப்படுகிறது. சரியான கட்டணத்தைக் கணிப்பதற்கு நீங்கள் எங்கே பயணத்தைத் தொடங்கினீர்கள் என்றும் எங்கே பயணத்தை முடித்துக்கொண்டீர்களென்றும் ஒய்ஸ்டர் அறியவேண்டியது அவசியம்.

**எனது ஒய்ஸ்டர் அட்டையில் குறைமீதி இருந்தால் நான் என்ன செய்யவேண்டும்?**

நீங்கள் அடுத்த பயணம் மேற்கொள்ளுமுன் போதிய மீதி ஏற்படத்தக்கதாக அட்டையில் பணவரவு இடல் வேண்டும்.

**என்னிடம் கூடுதலாகக் கட்டணம் அறவிடப்பட்டிருப்பதாக நினைக்கிறேன். நான் என்ன செய்யவேண்டும்?**

உங்கள் அட்டை பதிவு செய்யப்பட்டிருந்தால தயவு செய்து உங்கள் பயண வரலாற்றை இணையத்தில் சரிபாருங்கள், அல்லது உங்களிடம் எவ்வளவு அறவிடப்பட்டிருக்கிறதென்று தொடுதிரைச் சீட்டுப்பொறி ஒன்றைப் பயன்படுத்திப் பாருங்கள். உங்கள் அறவீடு பற்றி இன்னும் விசாரிக்கவேண்டுமாயின் ஒய்ஸ்டர உதவிசேவையுடன் பின்வரும் எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள்: **0845 330 9876***.

**எனது பயணத்தில்தாமதம் ஏற்பட்டது. இது நான் எவ்வளவு தொகை செலுத்தவேண்டும் என்பதைப் பாதிக்குமா?**

சுரங்கத் தொடருந்து (Tube), டிஎல்ஆர் (DLR), இலண்டன் நிலமீதான தொடருந்து (London Overground) மற்றும் பங்குபற்றும் தேசிய தொடருந்துச் (National Rail) சேவை என்பனவற்றைப் பொறுத்தவரை, தொட்டு உள்நுழைவதற்கும் தொட்டு வெளியேறுவதற்குமிடையே உள்ள நேரம் இரண்டரை மணித்தியாலங்களுக்குமேலாகஇருப்பின்,பயணம்செய்யப்பணம்செலுத்திச்செல்லும்போது கட்டணம் இரட்டிப்பாக அறவிடப்படலாம். இவ்வாறு நடந்துவிட்டால் ஒய்ஸ்டர் உதவிச்சேவையுடன் **0845 330 9876*** என்கிற எண்ணில் தொடர்பு கொண்டு மீளளிப்பு பெறும் சாத்தியம் பற்றிய தகவல்களைப் பெறுங்கள்.

எங்கள் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட சூழ்நிலையில் உங்கள் சுரங்கத் தொடருந்துப் (Tube) பயணம் 15 நிமிடங்களுக்குமேல் தாமதமானால் வாடிக்கையாளர் சாசனப் படிவத்தை உபயோகித்து மீளளிப்புக்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம்.

எங்கள் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட சூழ்நிலையில் உங்கள் இலண்டன் நிலமீதான தொடருந்துப் (London Overground) பயணம் 30 நிமிடங்களுக்குமேல் தாமதமானால் ஒருவழித் தாமதப் பயணத்துக்குரிய பெறுமதிக்கு மீளளிப்புக் கோரி நீங்கள் விண்ணப்பிக்கலாம்.

வாடிக்கையாளர் சாசனப் படிவங்கள் **tfl.gov.uk/fares** இணையதளத்தில் அல்லது சுரங்கத் தொடருந்து (Tube) மற்றும் இலண்டன் நிலமீதான தொடருந்து (London Overground) நிலையங்களில் கிடைக்கும்.

**எனது ஒய்ஸ்டர் அட்டை இயங்காவிடில் என்ன செய்வது?**

ஒய்ஸ்டர் அட்டைகள் இயங்காமல் போவது அரிது. உங்கள் அட்டை இயங்காவிடில் அலுவலர் ஒருவருடன் தொடர்பு கொள்ளுங்கள். அல்லது கீழ்க்கண்ட ஒய்ஸ்டர் உதவிச்சேவை தொலைபேசி எண்ணை அழையுங்கள்: **0845 330 9876*.**

**நான் விம்பிள்டன் நிலையத்துக்கு ட்ராமில் சென்று வருகிறேன். நான் என்ன செய்யவேண்டும்?**

நீங்கள் விம்பிள்டனுக்கு ட்ராமில் செல்வதானால், எப்போதும் பயணத் தொடக்கத்தில் தொட்டு உள்நுழைந்து, நிலையத்திலிருந்து வெளியேறும்போது நிலைய வாயில் பொறி ஒன்றில் தொட்டு வெளியேறுங்கள். அவ்வாறு வெளியேறும்போது கையால் இயக்கப்படும் வாயிலில் உள்ள மஞ்சள் வாசிப்புப் பொறியில் தொடவேண்டாம். **விம்பிள்டனிலிருந்து** ட்ராமில் கிளம்புவதாயின் எப்போதும் நிலைய வாயில் பொறி ஒன்றில் தொட்டு உள்நுழைந்து, மீண்டும் ட்ராம் மேடையில் உள்ள மஞ்சள் வாசிப்புப் பொறியில் ட்ராமில் ஏறுவதற்குமுன் தொடுங்கள்.

**எனது ஒய்ஸ்டர் அட்டையை எவ்வாறு நான் பேணவேண்டும்?**

- அதனை அதன் உறையில் போட்டு வைத்திருங்கள்
- கடன் அட்டை போன்ற வேறு அட்டைகளிலிருந்து ஒய்ஸ்டர் அட்டையைப் புறம்பாக வைத்திருங்கள்
- அட்டையை வளைக்காதீர்.

# மேலும் உதவி வேண்டுமா?

- பின்வரும் இணையதளத்தை நாடுங்கள்: **tfl.gov.uk/oyster**
- பின்வரும் தொலைபேசி எண்ணை அழையுங்கள்: **0845 330 9876***

ஜனவரி 2009

அச்சுக்குச் செல்லும் சமயம் அனைத்து தகவல்களும் சரியாக உள்ளன. ஆகப்பிந்திய தகவல்களுக்கு தயவு செய்து பின்வரும் இணையதளத்துக்குச் செல்லுங்கள்: **tfl.gov.uk/oyster**

இணையதளம்

**tfl.gov.uk/oyster**

ஓய்ஸ்டர் உதவிச்சேவை

**0845 330 9876**

* BT எனப்படும் பிரித்தானிய தெலிக்கொம் வாடிக்கையாளர்களுக்கு ஓய்ஸ்டர் உதவிச்சேவையை அழைக்க நிமிடத்துக்கு 3.5p க்கு மேல் செலவாகாது (ஜனவரி 2009ல் உள்ளவாறு). BT அல்லாத தொலைபேசி அழைப்புக் கட்டணம் வேறுபடலாம்.